கொஞ்சம் ஆழமாக யோசித்து அவர்களுக்கு இருக்கின்ற உரிமைகளை நாம் ஏதோ தட்டிப் பறித்து விட்டோம் என்ற உணர்வு வந்து விடக் கூடாது என்ற காரணத்தால்தான் சட்டத் துறையுடன் இதைப் பற்றி பேசி அதற்குப் பின்னர் ஒரு முடிவு எடுக்கலாம் என்ற கருத்தை நான் ஏற்கனவே தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு ஏராளமான கைகள் தூக்கப்படுகின்றன. எல்லோருக்கும் அனுமதி தந்தால் இந்த ஒரு கேள்விதான் போகும். எனவே, வினா எண். 185, திரு. கு. லாரன்ஸ், மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர்.

185—

கேரள வாடகைக் கார்கள் தமிழகம் வரும்போது கட்டுப்பாடுகள் விதித்தல்.

*10747—திரு. கு. லாரன்ஸ் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வாடகைக் கார்கள் கேரள மாநிலம் செல்ல கடுமையான கட்டுப்பாடுகளைக் கேரள அரசு விதித்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) கேரள வாடகைக் கார்கள் தமிழகம் வரும்போது அதே மாதிரி கட்டுப்பாடுகள் விதிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இது குறித்து பொதுமக்களிடமிருந்தோ அல்லது வாடகைக் கார் உரிமையாளர்களிடமிருந்தோ அல்லது சென்னை போக்குவரத்துத் துறை ஆணையரிடமிருந்தோ புகார் ஏதும் இதுவரை அரசுக்கு வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து சென்ற சட்டமன்றப் கூட்டத் தொடரில் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்திலிருந்து புதிய கார்களுக்கு சென்ற ஒரு ஆண்டு காலமாக டூரிஸ்டு டாக்சியாக பர்மிட் கேட்கிறபோது கேரளாவுக்குச் செல்ல பர்மிட் வழங்குவது இல்லை, குறிப்பாக தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு. கேரளாவைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே டூரிஸ்டு பர்மிட் கொடுக்கிறார்கள். இரண்டாவது, நம்முடைய

1993 மார்ச் 31]

மாணவ, மாணவிகள் சாதாரண பஸ்களில் டெம்பரரியாக பர்மிட் வாங்கி சுற்றுலா பயணம் செல்லுகிறபோது தமிழகத்தைப் பொறுத்தவரையில் செல்லலாம் என்று சொன்னால் அவர்கள் எல்லா கிராமங்களுக்கும் செல்வதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் கேரளா செல்ல ரூட்கள் கொடுக்கிறார்கள். அதிலேயிருந்து கொஞ்சம் கூட அவர்கள் டிவியேட் செய்து ஒரு பர்லாங்கு அல்லது ஒரு கிலோ மீட்டர் கூட போக முடியாத அளவுக்கு கடுமையாக தடுப்பதும் வழக்குப்பதிவு செய்வதும் தமிழகம் என்று சொன்னாலே கொஞ்சம் * * கடுமையாக கேரள அரசு நடந்து கொள்வதைப் போன்று தெரிகிறது. எனவே, நான் இதை இப்போது அமைச்சரின் கவனத்திற்கு எடுத்து வைக்கிறேன். தொடர்ந்து நம்முடைய மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கேரள அரசோடு தொடர்பு கொண்டு அதற்குரிய வழிமுறைகளைக் காணுவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் * * கடுமையான போக்கு என்று இன்னொரு மாநிலத்தைப்பற்றிக் குறிப்பிடுகிற வார்த்தை அது கன்னியாகுமரி வாசகத்திற்குச் சரியாக இருக்கும். ஒட்டுமொத்தமாக அதைப் படிக்கிறபோது அதற்குத் தவறான எண்ணம் வரும். எனவே, கடுமையான என்று வேண்டுமானால் மாற்றிக் கொள்ளுங்கள்.

திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான என்று மாற்றிக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அந்தச் சூழ்நிலை அங்கே இல்லை. வாடகைக் கார் உரிமையாளர்களுக்கு, 7 நாட்கள் கேரள மாநிலத்திலே டூரிஸ்டுகள் பயணம் செய்வதற்கான அனுமதியை நாம் வழங்கியிருக்கிறோம். அதிலே இதுவரையிலும் இது போன்ற குறைபாடுகள் எங்களிடத்திலே சுட்டிக்காட்டப்படவில்லை. அது போன்ற குறைபாடுகள் தனிப்பட்ட முறையிலே இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை நேரடியாகத் தருவார்களேயானால், உடனடியாக அந்த அரசோடு பேசி, நல்ல முடிவு மேற்கொள்ளப்படும்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.